
www.newwisdomministries.com

# ஞா ன ஒ லி



# விழித்தால் எழுச்சியுண்டு



ஞானம் 07 – ஒலி 16 – 21.04.2024

# ஆசிரியர் பக்கம்



இயேசுவே ஆண்டவர் என்று உள்ளூர நம்பிய எவரும் இந்த உலகை வெல்வர். இதுவே மீட்பு பெற்ற அனைவரின் அடையாளம். அத்தகைய அருளையும், ஆற்றலையும் பெற்றுள்ள ஞான ஒலி இணைய இதழின் வாசக அன்பர்களே வணக்கம்.

நடந்து முடிந்த தேர்தலில் உங்களது வாக்குகளைப் பதிவு செய்திருப்பீர்கள். நல்லவர்களின் தலையெடுப்பை உறுதி செய்யும் அந்த மாபெரும் கடமையை செய்ததற்காக நமக்கு நாமே பாராட்டுக்களைப் பகிர்ந்து கொள்வோம். மீட்பராம் இயேசு என்றும் நம்மைக் கைவிடமாட்டார். அவரின் சித்தமும், நமது செபமும் நிச்சயம் நமக்கு வெற்றியைக் கொணரும். அதற்காக நாம் தொடர்ந்து செபிப்போம். வெல்க இந்தியா, வாழ்க பாரதம்.

நம்மை வெறுப்பவர்கள், நம்மை அழிக்க நினைப்பவர்கள். நாம் இருக்கும்வரை நிம்மதியாகவே இருக்க மாட்டார்கள். அவர்களின் துன்பத்திற்கு, நோய்களுக்கு நமது இருப்பே மிகப்பெரிய காரணமாகும். ஒருவகையில் பார்த்தால், அவர்களின் மண்டைக்குள் இருந்து அவர்களை பாடாய்படுத்திக் கொண்டு இருக்கின்றோம். மேலும், அவர்களை ஆள்வதும், இயக்குவதும் அவர்கள் கொண்டிருக்கும் நம்மைப்பற்றிய எதிர்மறை எண்ணங்கள்தான் அப்படிப் பார்த்தால், நாம்தான் அவர்களின் நிம்மதியின்மைக்குக் காரணம். தங்களையே அழிப்பதற்காக நம்மை அழிக்க நினைப்பார்கள். ஆகவேதான் சொன்னார்கள், நீ மற்றவரை அழிக்க நினைத்தால், உன்னையே நீ அழித்துக் கொள்வாய் என்று.

நம் பகைவர்கள் நாம் எப்போதும் கவலைப்படவேண்டும், முகம் வாடி, பலவீனப்பட்டு, மனநோய்பட்டு இருக்க வேண்டும். அதனால் நமது முன்னேற்றம் தடைப்படவேண்டும். எல்லாவற்றிலும் நாம் தேங்கி நிற்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுவார்கள். மற்றவரைக் கெடுக்க நினைத்தக்கொண்டே இருப்பவர்கள், தங்களின் மனதைக் கெட்ட எண்ணங்களால் நிரப்பியே வைத்திருப்பதால், அவர்களைச்சுற்றி எப்போதும் கெட்டதாகவே வளர்ந்துகொண்டிருக்கும். அதைத்தான் கெடுவான் கேடு நினைப்பான் என்று சொல்லி வைத்திருப்பார்கள்.

வேலை வெட்டி இல்லாதவர்கள், கூறு கெட்டவர்கள்தான், மற்றரை பகைத்துக்கொண்டே இருப்பார்கள். விவரமானவர்கள், பகையை ஒருநாளுக்குமேல் வளரவிடமாட்டார்கள். அல்லது ஒதுங்கி உறுப்படியான வேலையைப் பார்க்கக் கிளம்பிவிடுவார்கள்.

வேலை வெட்டி இல்லாதவன், பொழைக்கத் தெரியாதவன், மற்றவரை பகைத்து அவர்கள் தன்னோடு சதாகாலமும் சண்டை போட்டுக்கொண்டே இருக்கவேண்டும் என்று அத்தனை அழிச்சாட்டியமும் செய்து கொண்டே இருப்பார்கள். சந்தோஷமாய் இல்லாதவன் யாரையும் சந்தோஷமாய் இருக்க விடமாட்டான். அடிமைகள் அனைவரையும் அடிமைப்படுத்துவார்கள். அவர்கள் நரகலைப் போன்றவர்கள். அழுகிப்போன நாய்ப் பிணத்தைப்போல சுற்றுப்புறத்தை எப்போதும் நாறடித்துக் கொண்டே இருப்பார்கள்.

ஆகவேதான் துஷ்டனைக் கண்டால், தூர விலகு என்று நம் முன்னோர்கள் சொல்லி இருக்கின்றார்கள். தூர விலகு என்றால், உடலளவில் மட்டுமல்ல...மாறாக அவர்களைப் பற்றிய பகை எண்ணங்களையும், அவர்கள் நமக்குச் செய்த அனைத்தையும் பற்றிய எண்ணங்களையும் நம் மனதிலிருந்து நினைவுகளிலிருந்தும் விலக்கி வைக்க வேண்டும்.

நம் உயர்ந்த சிந்தனைகள் நிறைந்துள்ள நம் மனதில், சிந்தனைத் தளத்தில், இப்படிப்பட்ட தரமற்ற, கீழ்த்தரமான மனிதர்களின் நினைவுகளுக்கு இடம் தராது பார்த்துக் கொள்ளவேண்டும். கெட்ட மனிதர்களை நம் வீட்டுக்குள் அனுமதிக்காததுபோனறு, நம் எண்ண வீட்டிற்குள் அவர்களை அனுமதிக்கக் கூடாது, தவிர்க்க முடியாத சூழலைத் தவிர, அற்பத் தருணங்களைத் தவிர, நிரந்தரமாக நமக்குள் அவர்களுக்குக் கூடுகட்டி வாழ வைத்துவிடக் கூடாது.

அதற்கு இயேசு நமக்கு ஒரு வழியைக்

கற்றுக் கொடுத்திருக்கின்றார். பேதுரு இயேசுவின் பாடுகளைத் தவிர்க்க வேண்டும் என்று சொன்னவுடன், இயேசு, தாமதமின்றி, போ அப்பாலே சாத்தானே என்று இறைவிரோதச் சிந்தனையை ஆலோசனையை உடனே அப்புறப்படுத்தினார். அதுபோல, தீய சிந்தனைகளை, தீயவர்கள், பகைவர்களுக்கு நம் மனதில் வீடுகளைக் கட்டிப்பராமரிக்காமல், வேரோடும், வேரடி மண்ணோடும் அகற்றி வைப்பதுதான், நாம் நம்மை அன்பு செய்வதன் அடையாளமாகும்.

நம் உடல், மன நோய்களுக்குக் காரணம், இந்த பகைச் சிந்தனைகளும், அதனைப்பற்றிய நம் விலாவாரிய கற்பனைகளும், நமக்குள்ள நாம் பகைவர்களோடு நடத்தும் சண்டைகளும், விவாதங்களும், போர்களும்தான் காரணம். இப்படிப்பட்ட எதிர்மறை உணர்வுகள்தான் நம் உடலையும், மனதையும் சிதைப்பதோடு, நிரந்தரமாக அழிக்கும் விஷங்களாகும்.

நமக்குள்ளே அப்படிப்பட்ட எதிர்மறையான சிந்தனைகளை எப்போதும் எழவைத்து, அதனால், நாம் எல்லாவற்றிலும் சிதைந்துபோக வைப்பதே நம் பகைவர்களின் ஒரே குறிக்கோள். அவர்கள் அதற்கான விதைகளை நமக்குள் விதைத்துவிடுவார்கள். ஆனால், அவர்களின் ஸ்லீப்பர் செல்களாக நாம் மாறும்வரை போராடுவார்கள். அதன்பிறகு, அவர்கள் பணியை நாமே செய்ய ஆரம்பிப்போம். அதாவது, அவர்கள் உருவாக்கிய அந்த பகை அனுபவங்களை, சம்பவங்களை நாம் ஆயிரம் முறை, பல்லாண்டுகள் திரும்பத் திரும்ப சிந்தித்து, சிந்தித்து நம்மையே நாம் சிதைத்துக்கொண்டே இருப்போம். அதை அவர்கள் தூரத்திலிருந்து வேடிக்கைப் பார்த்துக்கொண்டே இருப்பார்கள். அவ்வாறு செய்யும் நாம், கூட இருந்தே குழிபறிப்பவர்களாய் மாறியிருக்கிறோம் என்பதை மறந்து வாழ்வோம்.

நம்மை நாமே செதுக்காமல், சிதைக்கும் நாம் கடைந்தெடுத்த ஏமாளிக்கள், வடிகட்டின கசடுகள் என்றுதான் நம்மை சொல்லிக் கொள்ள வேணடும்.

பகை உணர்ச்சி, பயம், எரிச்சல், நடுக்கம் இவைகள் ஒருவருக்குள் என்னென்ன மாற்றங்களை நம் உடலிலும், மனதிலும் ஏற்படுத்துகின்றன என்பதை அறிவதற்காக ஓர் விஞ்ஞானி, பூனையையும், நாயையையும் வைத்து ஓர் ஆராய்ச்சி செய்தார்.

அவர் ஒரு பூனையை நன்கு வளர்த்தார். அதன்பிறகு ஒரு நாயையும் வளர்த்தார். இரண்டையும் வேறு வேறு இடத்தில் வைத்து பராமரித்தார். இரண்டும் ஒன்றை ஒன்று பார்க்கும்போது, முறைத்து கொள்வதைப் பார்ப்பார். இரண்டுக்கும் தனித்தனியே உணவிட்டு வளர்த்தார். பொதுவாக நாயும், பூனையும் பகைவர்களாகவே இருப்பார்கள்.

தன் ஆராய்ச்சியை ஆரம்பிக்கும் நாளிலிருந்து, பூனைக்கு வீட்டின் வாசலில் ஒரு பாத்திரத்தில் அதற்குப் பிடித்த உணவைக் கொடுப்பார். அந்தப் பூனை ஆசையோடு, ஆவலாய் அந்த உணவை சாப்பிடும்போது, திடீரென அந்த நாயை அவிழ்த்து விடுவார். தன்னை நோக்கி வேகமாக வரும் நாயைப் பார்த்ததும் பூனை பயந்தடித்து சாப்பிட்டும் சாப்பிடாமல் ஓடிப்போகும். மறுநாள் பூனை சாப்பிட வரும்போது, மிகவும் எச்சரிக்கையாக சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, சாப்பிட ஆரம்பிக்கும், அவர், மறைவிடத்திலிருந்து அந்த நாயை அவிழ்த்துவிடுவார். அதை எதிர்பார்க்காத அந்தப்பூனை தப்பித்து ஓடிப்போய் மறைந்து நடுங்கிக் கொண்டிருக்கும். இவ்வாறு, ஒருவாரம் நடந்தது. அந்தப் பூனை ஒருவாரத்தில் மிகவும் மெலிந்துவிட்டது. பலவீனப்பட்டு, நோய்வாய்ப்பட்டுவிட்டது. அந்தப் பூனையை நன்கு சோதித்தார். அப்போது அந்த பூனையின் வயிற்றுக்குள் இருந்த உணவானது, கருப்பாய் கட்டிகட்டியாய் விஷமாக மாறியிருந்ததை கண்டுபிடித்தார். அதன் பிறகு, அவர் அந்த நாயை அப்புறப்படுத்திவிட்டார். அந்த வீட்டில் அந்தப் பூனையை மட்டும் வைத்து நன்கு பராமரித்தார். அந்த வீட்டில் நாய் இல்லை என்பதை உறுதி செய்த அந்தப் பூனை, பயமின்றி நன்கு சாப்பிட்டது நன்கு கொழு கொழு என்று வளர்ந்து நன்றாக இருந்தது. அப்போது அந்தப் பூனையின் வயிற்றில் இருந்த உணவை சோதித்துப் பார்த்தபோது அது எந்தவிதப் பாதிப்புக்கும் உள்ளாகதிருந்ததைக் கண்டுபிடித்தார்.

கோபமாக இருக்கும்போதும், பகை உணர்ச்சி மேலோங்கி இருக்கும்போதும், மனஉளைச்சலாய் இருக்கும்போதும் நாம் சாப்பிடும் சாப்பாடும், பானமும் நமக்கு விஷமாய் மாறிவிடும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்மறையாய் உள்ள எதுவும் விஷத்திற்குச் சமம் என்பதை நாம் அறியாமல், நாம் கண்டும் காணாமல் எப்போதும் அப்படிப்பட்ட எண்ணங்களோடு வாழும்வகையில், நம் வாழ்க்கை முறை அமைந்துவிட்டது. நம் நியாயமான, ஆரோக்கியமான விழிப்புணர்கள் மழுங்கடிக்கப்பட்டுள்ளன. விழியற்ற ஒருவர், பழக்கமில்லாத ஓர் இருட்டறையில் தட்டித்தடுமாறுவதைப்போன்று, நாம் வாழ்கின்றோம். கண்ணிருந்தும் பார்ப்பதில்லை, காதிருந்தும் கேட்பதில்லை. மனவிழிப்பு, துணிவும் மனமாற்றம்தரும். எழுச்சியும் இயல்பாகும்.



# விவிலியம் அறிவோம்




## வாக்களிக்கப்பட்டநாட்டில்; நுழைதல்

இஸ்ரயேல் மக்கள் யோர்தான் ஆற்றைக் கடந்து வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைந்தவுடன் மூன்று நிகழ்வுகள் நடப்பதாக யோசுவா 5 வது பிரிவு பதிவு செய்கிறது. அவை முறையே 1) விருத்தசேதனம் செய்யும் சடங்கு (5:2-9); 2) பாஸ்காவிழாக் கொண்டாட்டம் (5:10-12); ஆண்டவரின் படைத்தலைவர் காட்சி (5:13-15). இந்த மூன்று நிகழ்வுகளையும் ஆழமாகச் சிந்திப்போம். அதற்குமுன் இஸரயேல் மக்கள் கானான் நாட்டில் நுழைந்ததும் அங்கு வாழ்ந்த மக்களின் மனநிலை எவ்வாறு இருந்தது என்பதை யோசுவா 5:1வது சொற்றொடர் கூறுகிறது. அதைப்பற்றிச் சிந்திப்பதும் அவசியம். கானான் நாடு குறுநில மன்னர்களைக் கொண்டதாக இருந்தது. கானானில் வாழ்ந்த பெரும்பாலான மக்கள் எமோரியர் இனத்தைச் சேர்ந்தவர்களாகவும் கானானியர்களாகவும் இருந்தனர். எமோரியர்கள் மலைப்பகுதிகளில் வாழ்ந்தனர். கானானியர்கள் கடற்கரைப் பகுதிகளில் வாழ்ந்தனர். இஸ்ரயேல் மக்கள் பெரும்பாலும் எமோரியர்கள் வாழ்ந்த மலைப்பகுதிகளைக் கைப்பற்றி அங்கே குடியிருப்புகளை அமைத்தனர் என யோசுவா நூல் நமக்குக் கூறுகிறது. இஸ்ரயேல் மக்கள் கானான் நாட்டில் நுழைந்தவுடன் எமோரிய நாட்டு அரசர்களும் கடலுக்கு அருகிலிருந்த கானானிய மன்னர்களும் ஆண்டவர் யோர்தான் நீரை இஸ்ரயேலர் கண்முன் அவர்கள் கடக்கும் வரையில் வற்றச் செய்தார் என்று கேள்வியுற்றபொழுது, அவர்களின் இதயங்கள் கலக்கமுற்றன. இஸ்ரயேலர்முன் அவர்கள் மனந்தளர்ந்தனர் என வாசிக்கிறோம் கானான் நாட்டில் வாழ்ந்த மக்களின் மனநிலை இஸ்ரயேல் மக்கள் அவர்களின் நகரங்களைக் கைப்பற்றுவதற்கு ஏதுவானதாக இருக்கிறது. ஆண்டவர் அவர்களோடு இருக்கிறார். ஆனால் அவர்கள் கானான் நாட்டு நகரங்கள் மீது போர்தொடுக்குமுன் ஆண்டவரோடு உள்ள உடன்படிக்கையைப் புதுப்பிக்கும் வண்ணம் அனைவருக்கும் விருத்தசேதனம் செய்ய ஆண்டவர் யோசுவாவுக்குக் கட்டளையிடுகிறார்.

யோசுவா 5:2-9 வரையுள்ள சொற்றொடர்கள் யோசுவா இஸ்ரயேலருக்குச் செய்த விருத்தசேதனம் பற்றிக் கூறுகின்றன. ஆண்டவர் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்தபோது உடன்படிக்கையின் அடையாளமாக இஸ்ரயேலின் ஆண் மக்கள் அனைவரும் விருத்தசேதனம் செய்யவேண்டும் எனப் பணித்தார். எனவே ஆபிரகாமின் வழிமரபினர் அனைவரும் விருத்தசேதனம் செய்தனர். எகிப்திலிருந்து புறப்பட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டை நோக்கிப்

பயணித்தவர்கள் அனைவரும் விருத்தசேதனம் செய்திருந்தனர். அவர்கள் அனைவரும் பாலைவனப் பயணத்தில் இறந்துவிட்டனர். ஆனால் நாற்பது ஆண்டுகளாகப் பாலைவனத்தில் பயணம் செய்கையில் பிறந்தவர்கள் யாரும் விருத்தசேதனம் செய்யப்படவில்லை. எனவே ஆண்டவர் அவர்கள் அனைவருக்கும் விருத்தசேதனம் செய்ய யோசுவாவுக்குக் கட்டளையிடுகின்றார். இந்நிகழ்வில் ஓர் இறையியல் பின்னணியும் இருக்கிறது. இஸ்ரயேல் மக்களின் சட்டப்படி விருத்தசேதனம் செய்தவர்கள் மட்டுமே பாஸ்கா விழாவைக் கொண்டாட முடியும் (விப 12:43-49) பாலைவனத்தில் பயணம் செய்த நாற்பது ஆண்டுகளும் பாஸ்கா விழா கொண்டாடப்படவில்லை. எனவே வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைந்தவுடன் பாஸ்கா விழா கொண்டாடுவதற்கு யோசுவா விரும்புகின்றார். எனவே விருத்தசேதனம் ஆண்டவரோடு உள்ள உடன்படிக்கையைப் புதுப்பிக்கவும், வாக்களிக்கப்பட்ட நாட்டில் பாஸ்காப் பெருவிழாவைக் கொண்டாடவும் அவர்களைத் தயஸரிக்கிறது எனக் கூறலாம்.

இஸ்ரயேல் மக்கள் தங்கியிருந்து விருத்தசேதனம் செய்த இடம் கில்கால் என அழைக்கப்படுகிறது. கில்கால் என்ற சொல் பொதுவாக கற்களின் வட்டம் எனப் பொருள்படலாம் என பலரும் கருதுகின்றனர். இங்கே கற்கள் அதிகமாக இருந்திருக்கலாம். விருத்தசேதனம் செய்வதற்கு யோசுவா கற்களிலிருந்துதான் கத்திகள் செய்கிறார். ஆனால் இந்த இடத்தைப்பற்றிய இரண்டு மரபுகள் யோசுவா 5:2-9 வரையுள்ள பகுதியில் காணப்படுகின்றன. முதல் மரபிலிருந்து வருகிற செய்திகளை 5:2-4 இல் பார்க்கிறோம். அதன்படி யோசுவா கிபயத்துகாரலோத்து என்னுமிடத்தில் இஸ்ரயேலருக்கு விருத்தசேதனம் செய்தார் எனக் கூறப்படுகிறது. கிபயத்துகாரலோத்து என்ற பெயருக்கு நுனித்தோல்களின் குன்று என்பது பொருள். இந்தப் பெயருக்கும் கில்கால் என்ற பெயருக்கும் பெரிய தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. கில்கால் என்ற பெயர் வருவதற்கு வேறு ஒரு மரபு காரணமாக இருக்கலாம் என ஒரு சில அறிஞர்கள் கருதுகின்றனர். அந்த மரபின்படி இப்பெயர் கில்காலில் இருந்த ஒரு தொழுகை மேட்டை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம். யோசுவா 5:9 இன் படி இன்று எகிப்தியரின் பழிச்சொல்லை உங்களிடமிருந்து நீக்கிவிட்டேன் என ஆண்டவர் யோசுவாவிடம் கூறுகிறார். விருத்தசேதனம் செய்ததன் வழியாக இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரோடு உள்ள உறவைப் புதுப்பித்துக்கொள்கின்றனர்; மீண்டும் ஆண்டவருடைய மக்களாக மாறுகின்றனர். எனவே விருத்தசேதனம் செய்ததைக் குறித்துதான் ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார் என நாம் கருதலாம். எனவே அந்த இடம் கில்கால் என அழைக்கப்படுகிறதுஎனக் கூறப்படுகிறது. எபிரேய மொழியில் காலோத்தி என்ற வினைச்சொல் நான் நீக்கிவிட்டேன் என்ற பொருளைக் கொண்டதாக உள்ளது. இந்த வினைச்சொல்லைச் சுட்டிக்காட்டுவதாக கில்கால் என்ற சொல் உள்ளது.

விருத்தசேதனம் சடங்கு முடிந்தபின் அவர்கள் பாஸ்காப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றனர்.

இஸ்ரயேல் மக்களின் விடுதலைப் பயணம் ஒரு பாஸ்கா விழாவுடன் தொடங்கியது; இப்போது இன்னொரு பாஸ்கா விழாவுடன் அவர்களுடைய விடுதலைப் பயணம் நிறைவுக்கு வருவதாகக் காட்டப்படுகிறது. பிற்காலத்தில் கொண்டாடப்பட்ட பாஸ்காப் பெருவிழாவின் கூறுகள் இங்கே முன்மொழியப்படுவதாகப் பல அறிஞர்களும் கருதுகின்றனர். இங்கேக் கொண்டாடப்படுகின்ற பாஸ்காவிழா, மேய்ப்பர்களின் வசந்தகால விழா மற்றும் புளியாத அப்பத்திருவிழா ஆகிய இ.ரண்டு விழாக்களின் சங்கமமாக உள்ளது. நாடோடிகளாக, மந்தைகளை மேய்ப்பவர்களாக வாழ்ந்த இஸ்ரயேல் மக்களும், பண்டைய மேற்காசிய நாடுகளில் மேய்ப்பர்களாக வாழ்ந்த ஏனைய மக்களும் இலையுதிர் காலத்தில் தங்கள் மந்தைகளுடன் ஓரிடத்தில் தங்கியிருக்கும் பழக்கம் இருந்தது. இலையுதிர் காலத்தில் மந்தைககளுக்கு மேய்ச்சல் கிடைப்பது கடினம். இலையுதிர் காலம் முடிந்து வசந்த காலம் தொடங்கும்போது புல்வெளிகளும் தாவரங்களும் தளிர்க்கத் தொடங்கும். இந்த நேரத்தில் மந்தைகளை மேய்ப்பதற்க்காக அவைகளை வெளியேக் கொண்டு வருவார்கள். அப்போது மேய்ப்பர்கள் கொண்டாடும் விழாதான் வசந்தகால விழா. இந்த விழாவின்போது ஓர் ஆட்டைக் கொன்று அதன் இறைச்சியை அனைவரும் இணைந்து உண்பார்கள். தீய ஆவிகளின் பிடியிலிருந்து மந்தையையும் தங்களையும் காப்பதற்காக அந்த ஆட்டின் இரத்தத்தைத் தாங்கள் குடியிருக்கும் கூடாரங்களின் மீதும் மந்தைகளின் மீதும் தெளிப்பார்கள். புளியாத அப்பவிழா விவசாயிகள் கொண்டாடிய ஓர் அறுவடைத் திருவிழா. இந்த விழா இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டைக் கைப்பற்றி அங்கே குடியேறிய பிறகுதான் கொண்டாடப்படடிருக்க வேண்டும். நாளடைவில் இந்த இரண்டு விழாக்களும் இணைக்கப்பட்டு பாஸ்கா விழாவாக, இஸ்ரயேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து பெற்ற விடுதலையை நினைவுகூரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது. கில்காலில் இந்த இரண்டு விழாக்களும் இணைந்த விழாவாகப் பாஸ்காப் பெருவிழா கொண்டாடப்படுவதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எகிப்திலிருந்து புறப்படுவதற்குமுன் பாஸ்கா விழாவைக் கொண்டாடியதுபோல் வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைந்தவுடன் பாஸ்கா விழாவைக் கொண்டாடுவது, யோர்தான் ஆற்றைக் கடந்த நிகழ்வு ஒரு விடுதலை நிகழ்வாகச் சித்தரிப்பதற்காகவே எனக்கூறலாம். மேலும் கானான் நாடு வளமானநாடு, அவர்களுக்குத் தேவையான உணவைத் தருகின்ற நாடு என்பதும் கூறப்படுகிறது. யோசுவா 5:6 கானான் நாட்டைப்பற்றிக் கூறும்போது, பாலும் தேனும் வழிந்தோடும் நாடு எனக் கூறுகிறது. விவசாயம் செய்வதற்கும் மேய்ச்சலுக்கும் ஏற்ற நாடாகக் கானான் நாடு இருந்தது எனக்கூறலாம். பாஸ்காப் பெருவிழாவைக் கொண்டாடியபின் இஸ்ரயேல் மக்கள் கானான் நாட்டில் விளைந்த விளைச்சலை உண்ண ஆரம்பிக்கின்றனர். பாஸ்காவின் மறுநாள் நிலத்தின் விளைச்சலையும் புளிப்பற்ற அப்பத்தையும் வறுத்த தானியத்தையும் உண்டனர் என வாசிக்கிறோம். கானான் நாட்டில் நிரந்தரமாகக் குடியேறியபின்தான் இது சாத்தியமாகியிருக்க முடியும். நிலத்தின் விளைச்சலை உண்ட மறுநாளிலிருந்து

மன்னா நின்றது. இஸ்ராயேலருக்கு மன்னா மீண்டும் கிடைக்கவில்லை என்ற செய்தியும் இந்தக் கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

கானான் நாட்டின் நகரங்களைக் கைப்பற்றுவதற்கு முதலில் எரிகோ நகரைக் கைப்பற்ற வேண்டும். எரிகோ வல்லமைவாய்ந்த கோட்டைகளைக் கொண்ட ஒரு நகரம். யோசுவா எரிகோ நகரின் அருகில் நிற்கும்போது ஓர் ஆடவனைக் காணும் நிகழ்வு கானானில் நுழைந்தபின் நடக்கின்ற மூன்றாவது நிகழ்வாக வருகிறது. யார் இந்த ஆடவர்? அவர் கையில் உருவிய கத்தியுடன் நிற்கிறார். யோசுவா அவரிடம் சென்று நீர் எங்கள் பக்கமா? அல்லது எதிரிகள் பக்கமா? எனக் கேட்கிறார். அந்த ஆடவர் நான் ஆண்டவரின் படைத் தலைவன் எனத் தன்னை வெளிப்படுத்துகின்றார். தன்னை ஆண்டவரின் படைத் தலைவன் எனக் கூறுகின்ற ஆடவன் ஆண்டவர்தான் என்பதுதான் பெரும்பாலான அறிஞர்களின் கருத்தாக உள்ளது. யோசுவா அவரை அறிந்துகொண்டவராக முகம் தரையில்பட வீழ்ந்து வணங்கி மரியாதை செய்கின்றார். ஆண்டவருடைய கட்டளையை எதிர்பார்த்து நிற்கின்றார். ஆண்டவரின் படைத்தலைவர் யோசுவாவிடம், உன் காலணியை உன் காலிலிருந்து அகற்று. ஏனெனில் நீ நிற்கும் இடம் புனிதமானது என்று கட்டளையிடுகின்றார். இந்த வார்த்தைகள் எரியும் புதரில் ஆண்டவர் மோசேக்குக்




காட்சியளித்ததை நினைவுக்குக் கொண்டுவருகிறது. இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து மீட்டு வருவதற்காக மோசேயை அழைத்தபோது ஆண்டவர் எரியும் புதரில் மோசேக்குக் காட்சியளிக்கிறார். அந்த இடம் புனிதமான இடமாக இருந்ததாலும்,ஆண்டவரின் பிரசன்னம் அங்கே இருந்ததாலும் மோசே தனது காலணிகளைக் கழற்றப் பணிக்கப்படுகிறார். ஆண்டவர் மோசேயுடன் இருந்ததுபோல யோசுவாவுடனும் இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துவதாகவும் இந்நிகழ்வு உள்ளது. இஸ்ரயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைந்து விட்டனர். ஆண்டவருடைய பிரசன்னம் அவர்களோடு இருக்கிறது. இனி அவர்கள் நாட்டை வெற்றி கொள்ளவேண்டும்.

பயணம் தொடரும்,



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்
புனித.அலோசியஸ் மேல்நிலைப் பள்ளி
தாராபுரம்

# ஞாயிறு மறையுரை



**பாஸ்கா 4ம் ஞாயிறு**
**21.04.2024**

**திருப்பலி வாசகங்கள்**
திருத்தூதர் பணிகள் 4/8-12
1 யோவான் 3/1-2
லூக்கா 10/11-18

மாட்டு வண்டிக்கு உயிர் இல்லை. மாட்டுக்கு அறிவு உண்டு. ஆனால் வண்டிக்காரன் உயிரில்லாத வண்டியை அறிவுள்ள மாட்டுடன் பூட்டி, எந்த இடம் செல்லவேண்டும் என்பதை தீர்மானித்து வண்டியைச் செலுத்துவான். எவ்வளவு தூரம் எவ்வளவு பாரம் எவ்வளவு நேரம் அமைத்தையும் தீர்மானிப்பவன் வண்டிக்காரன் மட்டுமே. அறிவிருந்தும் சுமப்பது தானாக இருந்தும் மாட்டால் ஒன்றும் செய்ய இயலாது. அதுபோல் உடம்பு என்ற ஜட வண்டியை,ஆத்மா உயிர் என்ற மாட்டுடன் பூட்டி இறைவன் என்ற வண்டிக்காரன் ஓட்டுகிறான். அவனே தீர்மானிப்பவன். அவன் இயக்குவான் மனிதன் இயங்குகிறான். எவ்வளவு காலம் எவ்வளவு நேரம் எவ்வளவு பாரம் தீர்மானிப்பது இறைவனே. இது தான் நமக்காக இறைவன் போட்டிருக்கும் திட்டம். இது தான் இறைவன் நமக்குத் தந்திருக்கும் பணி. இதை உணர்ந்தவனுக்குத் துயரம் இல்லை. இதை உணராதவனுக்கு அமைதி இல்லை.

புலம்பல்: தந்தைக் கடவுள் தன் மந்தையைக் குறித்து எசேக்கியேல் இறைவாக்கினரிடம் புலம்புவதைப் பின் வரும் விவிலியப்பகுதி தெளிவாக விளக்குகிறது.

தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே: என்மேல் ஆணை என் மந்தை கொள்ளையிடப்பட்டது. எல்லா காட்டு விலங்குகளுக்கும் இரையானது. ஏனெனில் அதற்கு ஆயன் இல்லை. என் ஆயர்கள் என் மந்தையைத் தேடவில்லை. என் மந்தையை அவர்கள் மேய்க்காமல் தாங்களே மேய்ந்து கொள்கிறார்கள். எசே 34:8.

ஆடுகளைஅன்பு செய்யும் நல்லாயர்கள் இல்லாததே இதற்குக் காரணம்.

ஆயன்: புலம்பியதோடு நில்லாமல் நானே என் ஆடுகளைத் தேடிப் போகப்போகிறேன் என்று தன் அன்பை ஆடுகள்மீது தான் கொண்ட அன்பை வெளிப்படுத்துகின்றார். ஓர் ஆயன் தன் மந்தையினின்று சிதறுண்ட ஆடுகளைத் தேடிச் செல்வதுபோல நானும் என் மந்தையைத் தேடிப்போவேன். மப்பும் மந்தாரமுமான நாளில் அவற்றை எல்லா இடங்களினின்றும் மீட்டு வருவேன். எசே 34:12

அரசர்கள்: தங்களை வழிநடத்த

அரசர்களைக் கேட்ட இஸ்ராயேல் மக்கள் அவர்களும் கைவிட்ட நிலையில் ஆயனில்லா ஆடுகளாக சிதறுண்டனர். 'இஸ்ராயேலர் அனைவரும் ஆயன் இல்லா ஆடுகளைப்போல் மலைகளில் சிதறுண்டுகிடக்கக் கண்டேன்' அப்பொழுது ஆண்டவர் கூறியது: இவர்களுக்குத் தலைவன் இல்லை. ஒவ்வொருவரும் அமைதியாகத் தன் சொந்த வீட்டிற்குத் திரும்பச் செல்லட்டும் என்றார். 1அர 22:17

தாவீது: ஆட்டு இடையனாக இருந்த தாவீதையே நல்ல மேய்ப்பனாக தேர்ந்தெடுத்து வழிநடத்த விரும்புகிறார் தந்தை கடவுள.; என் ஊழியன் தாமிது அவர்களுக்கு அரசனாய் இருப்பார். அவர்கள் அனைவருக்கும் ஒரே ஆயன் இருப்பான்;. என் நீதிநெறிகளின்படி அவர்கள் நடப்பர். எசே 37:24 இளையவனும் சிறியவனுமான தாவீதைத் தேர்ந்தெடுத்து பல அற்புதங்களை அவர் வழியாக நிகழ்த்திதன் மக்களை வாழ வைத்தார்.

சைரசு: சைரசு மன்னனைப்பற்றி, அவர் நான் நியமித்த ஆயன்: என் விருப்பத்தை நிறைவேற்றுவான். எசா 44:28 என்று புதிய ஆயனை நிணுமித்து அவனுடைய எதிரிகள் அனைவரையும் வலுவிழக்கச் செய்கிறார் கடவுள். இவ்வாறு பல்வேறு காலங்களில் பலரை ஆயர்களாக நியமித்த தந்தைக் கடவுள் இறுதியில் தன் அன்பார்ந்த மகனையே நல்லாயனாக நமக்குத் தந்தார்.

இயேசு: என் ஆடுகளுக்காக என் உயிரையும் கொடுப்பேன். நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன். அவையும் என் குரலுக்கு செவிசாய்க்கும் என்ற நல்ல ஆயன் அவர். ஆயனை பின் தொடர்வோம் இளைப்பாற்றியடைவோம்.





# பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு

தி.ப. 4 : 8-12, 1 யோவா. 3 : 1-2, யோவா. 10 : 11-18

**21-04-2024**

**திருப்பலி முன்னுரை**




**பா. சேவியர்**
மரியநாதபுரம்,
திண்டுக்கல்


நல்லாயனாம் இயேசுவின் குரலுக்கு செவிசாய்த்து வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்றைய நாளை நல்லாயன் ஞாயிறு என்றும், இறை அழைத்தல் ஞாயிறு என்றும் திருஅவை அழைக் கிறது. இயேசுவைப் போல், திருத்தூதர்களைப் போல் திருச்சபையை வழிநடத்த நல்ல ஆயர்கள் உருவாக உருக்க முடன் செபிக்க நாம் அழைக்கப் படுகிறோம்.

இயேசுவை நல்லாயனாக உருவகப்படுத்தி, உலக மக்கள் மீது அவருக்கு இருக்கும் எல்லையில்லா அன்பையும், அவர்களுக்காகத் தன் இன்னு யிரையே தரும் அளவுக்கு அவருக்கு இருந்த பற்றுறுதியையும் எடுத்துரைக்கிறது இன்றைய நற்செய்தி.

நாம் அனைவரும் நல்லாயன் இயேசுவின் மந்தையில் அவரது பராமரிப்பில் வாழும் மந்தையாய் இருக்கிறோமா?, நாம் வாழும் சூழல்களில் மற்றவர்களை நல்வழியில் வழிநடத்தும் வழிகாட்டிகளாக நல்ல ஆயரகளாக வாழ்கிறோமா? என்பது குறித்து இன்றைய வழிபாடு வழியாக சிந்திப்போம்.

நல்லாயனாகிய இயேசுவின் குரலுக்கு செவி கொடுக்கும் மாசற்ற செம்மரிகளாக வாழ வும், நல்லாயனாம் இயேசுவின் அழைத்தலை ஏற்று அருட் பணிக்குத் தங்களையே கையளிக்க முன்வரும் இளையோரை இறைவன் வழிநடத்தவும் இத்திருப்பலியில் இறையருளை வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை

தனது உயிரைத் தியாகம் செய்து இந்த உலகிற்கு வாழ்வு கொடுத்த இயேசுவின் செயல்பாடுகள் அவரது இறப்பிற்குப் பின்னும் தொடர்கிறது என்பதை இன்றைய முதல் வாசகம் சுட்டிக்காட்டுகிறது. இயேசுவே மக்களுக்கு மீட்பரா கவும், திருச்சபைக்கு மூலைக் கல்லாகவும் விளங்குகிறார் என்று தலைமைச் சங்கத்தினருக்குப் பேதுரு ஆற்றிய அருளுரையைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நாம் கடவுளுடைய அன்புப் பிள்ளைகள் என்று அழைக்கப்படக் காரணமாய் இருப்பது கடவுளது அன்பே என்பதைத் திருத்தூதர் யோவான் இன்றைய இரண்டாம் வாசகம் வழியே விளக்குகிறார். நாம் கடவுளின் மக்கள் என்ற ஒப்பில்லாத உயர்ந்த உறவைச் சுமந்து வரும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) வாழ்வும் வழியுமான அன்பு இறைவா, உம்மால் தேர்ந்து கொள்ளப்பட்ட உம் திருஅவையின் தலைவர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தையை நன்கறிந்த மேய்ப்பர்களாக, பசும்புல் மேய்ச்சலுக்கும் தெளிந்த நீரோடைக்கும் அழைத்துச் செல்லும் நல்லாயர்களாக விளங்கிட அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) நல்லாயனாம் அன்பு இறைவா, எம்மை ஆளும் அரசியல் தலைவர்களையும் அரசு அதிகாரிகளையும் உம் திருக்கரங்களில் ஒப்படைக்கிறோம். அவர்கள் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவர்களாய், இயேசு கொண்டிருந்த தலைமைப் பண்புகளைக் கொண்டவர்களாய், தியாக உள்ளம் கொண்டவர்களாய் விளங்கிட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) அறுவடையின் உரிமையாளரே இறைவா, அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு என்ற உமது அழைப்பினை ஏற்று, இன்றைய இளைஞர்களும் இளம் பெண்களும் அர்ப்பண உணர்வுடன் உமது அருட்பணியைத் தொடர்ந்து ஆற்றவும், உமது மறை உடலாகிய திருச்சபைக்கு அணிகலனாகத் திகழவும், உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும், மக்களுக்கு வாழ்வாகவும் வழியாகவும் விளங்கிட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) எங்கள் அனைவரையும் தம் உள்ளங்கையில் பொறித்து வைத்திருப்பவரான அன்பு இறைவா, நாங்கள் எங்கள் குடும்பத்தில் நல்ல தலைவர்களாகவும், பங்கில் நல்ல இறைமக்களாகவும், சமுதாயத்தில் நல்ல வழிகாட்டிகளாகவும், இருளில் தடுமாறுபவர்களுக்கு ஒளியாகவும், உலகிற்கு சாரமுள்ள உப்பாகவும் வாழத் தேவையான அருள் வரங்களைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

# ஞான வெளிச்சம் தரும் பொன் மொழிகள்



இனிய வார்த்தைகள் ஆனந்த வாழ்வு தரும்.
கடினமான பாதைகள் வெற்றிக்கு அழைத்துச் செல்லும்.

முடிந்தவரை முயல்வதல்ல விடாமுயற்சி.
ஒன்றை முடிக்கும்வரை முயல்வதே விடாமுயற்சி.

உறவுகளின் வெற்றிக்கு உதவுவது நாம் பேசும் வார்த்தைகள்.
ஒன்று சரியான வார்த்தையை சரியான சமயத்தில் பேசுவதைவிட
தவறான வார்த்தைகளை சொல்லாமல் இருப்பது அதைவிட சிறந்தது.

வலிமையானவர்கள் யாரையும் காயப்படுத்தமாட்டார்கள்
மாறாக மற்றவரை உயர்த்த உதவுவார்கள்

கடினமான பாதைகளை அனுமதிக்கும் கடவுள்
அதை எளிதாக்கும் அருளையும் கடவுள் அளவில்லாமல் தருகிறார்.

தோல்வி வெற்றியின் பரிசோதனைக்கூடம் மட்டுமல்ல
நம் வலிமையை, மனஉறுதியை அதிகப்படுத்தும் சோதனைக்களம்.

தனிமையை ஏற்று, அதைக் கையாளும் பக்குவம் வந்தவர்கள்
பிரபஞ்ச ஆற்றல்களில் ஒன்றிணைந்துவிடுகிறார்கள்.

ஒரே ஒரு முறை ஒருவர் பொய் சொல்லிவிட்டால்
அதுவரை அவர் சொன்ன உண்மைகள் அனைத்தும்,
சந்தேகத்திற்குரியவையாக மாறிவிடும்.

உண்மையான கனவு யாரையும் தூங்கவோ, தாமதிக்கவோ,
தள்ளிப்போடவோ, விட்டுவிலகிப் போகவோ விடவே விடாது.

செபம் அழகாகவோ, ஆர்ப்பாட்டமாகவோ,
கவிதையாகவோ, வார்த்தை ஜாலங்களால் நிறைந்ததாகவோ
இருக்க வேண்டியதாக கடவுள் எப்போதும் விரும்புவதில்லை.
நடிக்கும் பக்தியை கடவுள் அருவருக்கின்றார்.
பொய் மெய்யாய் இருக்க வாய்ப்பில்லை. ஏமாற்றும், ஏமாறும்.

# தமிழே..அமுதே..எனதுயிரே





## செம்மொழி :

தமிழ் மிகவும் தொன்மை வாய்ந்த திருந்தியமொழி. அது சொல்வளம் மிகுந்தது. நமது முன்னோர் நம் தாய் மொழியாம் தமிழ் மொழியை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என மூன்றாகப் பகுத்துப் பொன்னெனப் போற்றி வளர்த்து பயனடைந்து வந்தனர். அதனால் தமிழ் முத்தமிழ் என பெயர் பெற்றது. இத்தகைய பெயர் உலக மொழிகளில் வேறு எம்மொழிக்கும் இல்லை. இத்தகைய மொழிச் சிறப்பும் தமிழர் தனிப் பண்பாட்டுக்குச் சான்றாகும்.

இயற்றமிழ் என்பது தமிழ்ப் பாட்டுக்கள் ஆகும். புறநானூறு முதலிய பழந்தமிழ் நூல்கள் எல்லாம் இயற்றமிழ் நூல்களேயாம். உரைநடையும் இயற்றமிழே.

இயல்பாக உண்டாவதால் பாட்டு இயற்றமிழ் எனப்பட்டது. இயற்கைப் பொருள் என்பதுபோல அத்தமிழ்ப் பாட்டுகளை இசையுடன் பாடுவது இசைத்தமிழ் எனப்படும். இசையாவது பண்ணோடு தாளம் பொருந்தப் பாடுவது. அவ்வாறு இசையுடன் பாடிக்கொண்டு, கேட்போர்க்கு அப்பாட்டின் பொருள் எளிதில் இனிது விளங்கும்படி மெய்ப்பாடு தோன்ற நடிப்பது நாடகத் தமிழ் எனப்படும்.

மெய்ப்பாடு என்பது உள்ளக் குறிப்பைக் கண் முதலிய உறுப்புகளின் மூலம் வெளிப்படச் செய்யும். நகை, அழுகை, இழிவு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உபகை என்பன பாட்டின் கருத்து பிறருக்கு விளங்கும்படி மெய்யின் மூலம் வெளிப்பட செய்வதால் அது மெய்ப்பாடு எனப்பட்டது மெய் என்றால் உடம்பு. நாடகம், கூத்து எனவும் வழங்கும்.

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுக்கும் அன்று தனித்தனி புலவர்கள் இருந்தனர். இயற்றமிழ் புலவர்கள் சிறந்த புலமை – அறிவு – உடமையால் புலவர் எனவும், பாக்கள் இயற்றும் வன்மையால் பாவலர் எனவும், சிறந்த நாவன்மை – பேச்சு வன்மை உடையால் உடைமையால் நாவலர் எனவும் பெயர் பெற்றனர்.

இசைத்தமிழ் புலவர்கள் பாணர் எனப்படுவர். பாண்–இசை, பாணர் இசையில் வல்லவர். பாணர் மகளிர் பாணிச்சியர் எனப்படுவர். பாடினி பாட்டி என பெயரும் உண்டு. பாணருக்கு யாழ் இன்றியமையாததாகும். அதனால் அவர் யாழ்ப்பாணர் என்று அழைக்கப்பட்டனர். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனத் தமிழிசை ஏழு வகைப்படும்.

இயற்றமிழ் புலவர்கள் ஓயாத அயராத உழைப்பினால் முத்தமிழை நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்த்து வந்தனர்.

லீமா விக்டோரியா
தமிழாசிரியை.





# விடியல்



திருமதி.இலா.ஜெய தங்கம், பழநி

## சிறுபிள்ளைகள் மாற்றத்திற்கான திறவுகோல்கள்

அன்பிற்கினியவர்களுக்கு புன்னகை நிறைந்த வாழ்த்துக்களும்... வணக்கங்களும்...

இன்றைய காலகட்டத்தில் குழந்தைகள் பெரியவர்களைவிட அதிகமாக தொழில்நுட்பங்களை அறிந்து வைத்திருக்கின்றார்கள். அது அவர்களினுடைய கற்பனையிலும் வெளிப்படுகிறது. ஒரு தாத்தா தன் பேரனிடம் நன்னெறி கதையை சொல்லிக் கொண்டிருக்கின்றார். எல்லோரும் அறிந்த இந்த கதை தான்... நரி ஒன்று பசியோடு அருகே உள்ள திராட்சை தோட்டத்திற்கு நுழைந்தது. அந்த திராட்சை பழங்கள் மிகவும் உயரத்தில் இருந்ததால் பழங்களை சாப்பிட முடியவில்லை. சிறிது நேர முயற்சிக்கு பிறகு சீச்சீ இந்த பழம் புளிக்கிறது என்று சொல்லி அந்த தோட்டத்தை விட்டு வெளியேறி சென்றதாம் என்றார் தாத்தா.

இதை கேட்ட பேரன் தாத்தா இந்த கதையை நான் சிறிது மாற்றம் செய்து சொல்லவா என்று கூறினான். அப்படியா சொல்லு சொல்லு என்றாராம் தாத்தா. அதற்கு அந்த பேரன் ஒரு நரி பசியோடு திராட்சை தோட்டத்திற்குள் சென்றது. மிகவும் உயரத்தில் இருந்த பழங்கள் அதற்கு எட்டவில்லை. உடனே செல்போனை எடுத்தது. அருகிலே நல்ல திராட்சை தோட்டம் எது என்று கூகுள் மேப்பில் ஆராய்ந்தது. பின்பு திராட்சை பழங்கள் டெலிவரி செய்யும் ஆப் வழியாக இரண்டு கிலோ திராட்சை பழங்கள் வேண்டும் என்று ஆர்டர் செய்து, google pay வழியாக பணம் அனுப்பிவிட்டு வீட்டிற்கு சென்றது. அதற்குள் டெலிவரி நபர் வந்து சுவையான திராட்சை பழங்களை வீட்டிற்கு வழங்கி விட்டு சென்று விட்டார். நரி தன்னுடைய குடும்ப உறுப்பினர்களோடு இணைந்து மிகவும் மகிழ்ச்சியாக அந்த திராட்சை பழங்களை சுவைத்து

பகிர்ந்து சாப்பிட்டது என்று கூறி முடித்தான் பேரன்.

பிரியமானவர்களே இந்த சிறுவனுடைய கற்பனை கதையானது அவனுடைய உள்ளத்தில் உள்ள பெருந்தன்மை, இரக்க குணம், சிந்தித்தல், பகிர்ந்து வாழ்தல் என பல நல்ல பண்புகளை எடுத்து இயம்புகின்றது.

இது போன்ற உயர்ந்த குணங்கள் உள்ளத்திலே ஏற்படுவதற்கு குடும்ப உறுப்பினர்களின் ஒற்றுமை, இணக்கம், பாசம், அன்பு, விட்டுக் கொடுத்தல், ஏற்றுக்கொள்ளுதல் போன்ற நல்ல செயல்களின் வெளிப்பாடு குழந்தைகளின் உள்ளத்தை பண்படுத்தியுள்ளது.

வீட்டில் உள்ளவர்களின் தூய்மையான நல்ல ஒழுக்கங்கள் அவர்கள் அறியாமலேயே கண்ணாடியைப் போல குழந்தைகளுடைய பாவனைகளிலும் பிரதிபலிக்கின்றது.

மரியாதை இன்மை, முரண்பாடு, கோபம், சண்டை, பிரச்சனை, பிடிவாதம், பேராசை, சுயநலம் போன்ற தீய பழக்கங்களும் நம் இல்லத்து உறுப்பினர்களின் மத்தியில் இருந்து நம் பிள்ளைகளின் உள்ளத்தில் எழுகின்ற வாய்ப்புகள் அதிகமதிகமாக இருக்கின்றன.

சவால்களும் பிரச்சனைகளும் இருக்கின்ற இந்த காலகட்டத்திலே நம்முடைய குழந்தைகள் குடும்பத்திலும், சமூகத்திலும் பிற உறவுகளோடு எப்படி இணைந்து வாழ்கின்றனர்? வாழ்க்கை முழுவதும் விடாமுயற்சியோடு, தளராத உள்ளத்தோடு, தூய்மையான சிந்தனைகளோடு, இறைவனின் சாயலாய் இகத்தில் வாழ நம் பிள்ளைகளை நாம் பயிற்றுவிப்போம்.

ஆண்டவரின் ஆற்றல் பெரிது; ஆயினும்,
தாழ்ந்தோரால் அவர் மாட்சி பெறுகின்றார்
– (சீராக்3: 20)

தாழ்நிலையில் உள்ளவருக்கு நாம் எப்போதும் பரிவு காட்ட வேண்டும். அவ்வாறாயின் கடவுளுக்கு உகந்தோர் நமக்கு அன்பு காட்டுவர். சிறு பிள்ளைகள் விண்ணின் விடியல்கள். நாளைய உலகின் நட்சத்திரங்கள். உற்சாகப்படுத்துவோம்!
வழிநடத்துவோம்!! ஆமென்.



# திருக்குறளின் தேனமுதம்



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

## குறள் 92

அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்

## குறள் விளக்கம்

முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப்பெற்றால் மனம் மகிழ்ந்துபொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும்.

## சிந்தனை

சில மனிதர்களைப் பார்த்தவுடன் நமக்குப் பிடித்துவிடும். அவர்களின் சிரித்த முகம் எப்போதும் மலர்ச்சியோடு இருக்கும். சிரித்துக்கொண்டே ஒருவரைக் கண்டித்தோம் என்றால் அது சிறப்பாக இருக்கும். அப்படி யாரைக் கண்டிக்கிறோமோ அவர்கள் அந்தத் தவறிலிருந்து விடுபட்டுவிடுவார்கள். கடுகடுத்த முகத்தோடு நல்லதைச் சொன்னால்கூட அது பலனளிக்காதுபோகும். எனவே முகமலர்ச்சி என்பது மிக அவசியம். முகமலர்ச்சியோடு கொடுக்கவேண்டும். ஏனென்றால் அதுதான் கண்களுக்குத் தெரியும். அகமலர்ச்சி கண்ணுக்குத் தெரிவதில்லை. எனவே அகமலர்ச்சியைவிட முகமலர்ச்சி சிறந்தது என்கிறார் வள்ளுவர்.

தங்களிடம் உதவிவேண்டி வருவோரிடம் கடுகடுப்புடன் ஆயிரம் ரூபாய் கொடுப்பதைவிட முகமலர்ந்து சிறுதொகை கொடுத்தலே நல்லது. வேதாகமத்தில் பவுலடியார், இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முகமலர்ச்சியோடு அவற்றைச் செய்வதிலும் தாம்பெற்ற அருள் கொடைகளைப் பயன்படுத்த வேண்டும் உரோமையர் 12:8 ல் குறிப்பிடுகின்றார். கேட்பதைவிட நாம் எதை பார்க்கின்றோமோ அது நம் மனதில் விரைவில் பதியும். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும் என்பார் வள்ளலார்.

வேதாகமம் உங்களுடைய அன்பு வார்த்தையில்; அல்ல செயலில் இருக்கவேண்டும் என்கிறது. வள்ளுவர் நீ அகமுவந்து செய்யவேண்டும். அதனை முகமலர்ச்;சியோடு செய்யவேண்டியது அவசியம் என்கிறார். சிலர் தன்னுடைய குழந்தைகளுக்கு உணவு ஊட்டுகின்றபொழுது திட்டிக்கொண்டே உணவு ஊட்டுவர். தனது தோழனோ தோழியோ கேட்கின்ற உதவியை செய்வார்கள் ஆனால் முதலில் செய்ய முடியாது என்று எதிர்மறையாக பேசுவார்கள். எப்படியும் தோழன் தோழி உதவுவார்கள் என்பது உறுதியாக இருந்தாலும் அவர்கள் சொல்லில் கடுமை இருக்கும் செயலில் இனிமை இருக்கும் அவ்வாறு இருக்க வேண்டாம். மலர்ச்சியோடு நற்செயலைச் செய்யுங்கள் அது மிகமிக முக்கியமானது. முகமலர்ச்சியோடு ஒரு கடின சொல்லைச் சொன்னாலும் பரவாயில்லை இறுக்கமான முகத்தோடு நற்சொல்லை சொல்ல கூடாது.